செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஆ (1889) ஆவணி மீ 28உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அஉ] யாழ்ப்பாணம்- சாதாரணஎரு தை மீ நுஎ வெள்ளிக்கிழமை (12-2-1971) [இல-சரு

தக்ஷிண கைலாச மான்மியம்

["சிவாகம ஞான பாநு
சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள், அச்சுவேலி]
(முன் வளர்ச்சி — 7)

தேவர்கள் கலிவென்றமை

பிதமசிருட்டி ஆரம்ப காலத்தில் பிரமா முதலிய தேவர்கள் திருக்கைலாசமலையிற் போய்ச் சிவபெருமானை வணங்க தேவாதி தேவரே, லோகநாதரே படைத்தல் படைத்தல் தொழில்களைச் செய்யும் பதிப்பொருளே, வணக்கம். கிருதயுகம், திரேதாயுகம் துவாபரயுகம் என்னும் மூன்று யுகங்களிலும் மூவுலகங்களிலும் வாசஞ் செய்தோம். இப்பொழுது முன்னே மனைவியும் பின்னே பெற்ற தாய் சுமையெடுத்துக் கொண்டு செல்ல இவ்வுலகத்திலே கலிராசன் வந்துவிட்டான். பிருதுவியின் வீரியங் குறைந்தமையினால் ஒஷதி (பயிர்)கள் பலனற்றதாய் விட்டன. நீசர்பெருமையுற்று விளங்குகின்றனர். அரசர் குடிகளுடைய பொருளைப் பறிப்பதில் கண்ணுமகருத்துமாயிருக்கின்றனர் பிராமணர் தமக்குரிய கருமங்களையிழந்து விபரீத கருமங்களைச்செய்பவர்களாயிருக்கின்றார்கள். மனைவி நாயகன்மேல் மிக வைரங்கொண்ட மனமுள்ளவளாய் இருக்கிறாள் புத்திரர்கள் பிதாவை நிந்திப்பவர்களானார்கள் இப்படிப் பலவிதமான மாறுபாடுகள் கொண்டு விளங்கும் இக்கலியுகத்திலே தருமமும் சத்தியமும் காடுபோய் மறைந்துவிட்டன. ஆகையால் இனி யாங்கள் எங்கே போவோம் யாங்கள் கலியின் வசமாகாதபடி தப்பி வாழ்வதற்கேற்ற நல்ல ஒரு புண்ணியத் தலத்தைக் கூறியருளுதல் வேண்டுமென்று இரந்துயாசித்தார்கள். தேவர்களது வேண்டுகோளைக் கேட்ட சிவபெருமான் தேவர்களை நோக்கி எமது குமாரனாகிய சுப்பிரமணிய மூர்த்திக்குப் பல தலங்களுமிருக்கின்றன, அவற்றுள் கதிர்காம மலையானது உத்தமமானதும் எமது குமாரன் எப்பொழுதும் நீங்காதபடி வசிப்பதும், அலன் உகந்ததுமாயுள்ளது. அமமலையின் பக்கத்தில் மேலான இன்பத்தை அடியார்களுக்கு அளிப்பதும், கதிர்காமமென்று அடியார்களால் புகழப்படுவதும் ஆகிய தலமொன்றிருக்கின்றது. கலிமன்னனும், யமனும், ஆணவம் முதலிய நோய்களும் அந்தத தலத்தில் அணுகுவதில்லை. அத்தலவாசஞ் செய்பவர்களைப் பாவங்கள் சென்றடையாவாம். நீங்கள் கதிர்காம தலத்திற்போய் முனிவர்களோடு சுகமாக வாசஞ்செய்யுங்கள் என்று திருவருள் செய்தனர். பிரமா முதலிய தேவர்கள் சிவபெருமானுடைய திருவாக்கைக் கேட்டு ஆனந்தமுற்றவர்களாய் வணங்கி, கதிர்காமமென்னும் திவ்வியக்ஷேத்திரத்திற் போய் கதிர்காமநாதரை வணங்கிக்கொண்டு கலிவலிபிலகப்படாதவர்களாய்த் தியானத்திலிருந்தார்கள். (வளரும்)

தாயுமானவர் அருள்வாக்கை பாராயணஞ்செய்க

"பெருந்துறவியாய், சதா கிஷ்டை கொண்ட அருட் கோலத்துடன் சிவபூஜா துரந்தரராய் வாழ்ந்த உத்தம ஞானச்செல்வர் தாயுமான சுவாமிகள்; மௌனகுரு சுவாமிகளைக் குருவாகக் கொண்டு, தெய்விகப் பாடல்களை அருளி. பேரானந்த வாழ்விற்றிளைத்த செம்மல் அவர்; சிதம்பரம், திருவாரூர், திருப்பரங்குன்றம் முதலாம் தலங்களை தரிசித்துக் கொண்டு, திருவிராமேச்சுரமென்னுந் தலத்துக்குச் செல்லும் வழியில், மழையின்மை காரணமாக அவ்வூர் மக்கள் வருந்துவதைக் கணணுற்றதும், மழை வேண்டிப் பரமசிவனை மனதில் அன்போடு தியானித்து,

"சைவ சமயஞ்
சமயமெனி லச்சமயத்
தெய்வம் பிறைசூடுந்
தெய்வமெனி
—லைவரைவென்
றுனந்த வின்பி லழுந்துவது
முத்தியெனில்
வானங்காண் பெய்மின்
மழை"

என்னும் திருவெண்பாவைப் பாடி, வேண்டிய அளவில் மழை பெய்வித்து உலக சேமத்தை நிலைக்களமாகக் கொள்ளும்படி செய்தார். இந்த அரிய செய்கையைக் கண்ட அவ்விடத்தைச் சார்ந்த மக்களும், அயலூர் மக்களும் திகைப்புற்றார்கள். இதத கைய அருளாளர் அன்புமலரால் பாமாலை தொடுத்து இறைவனுக்குச் சாத்தியிருக்கிறார் அப் பாமாலைகளைப் பாராயணம்பண்ணுவோர் பேரானந்தம் பெறுவர். இன்று தாயுமானசுவாமிகளின் சரித்திரத்தை நம் சைவமக்களில் எத்தனைபேர் அறிந்திருப்பார்களோ என்று கூறுவது அரிதாகும்" இவ்வாறு, நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள ஆலயத்தில், யாழ். சைவசமய அபிவிருத்திக் கழகததின் ஆதரவில், தைப்பூசத்திலன்று இரவு நிகழ்ந்த தாயுமானசுவாமிகள் தினத்தில், தோப்பாய் வேளாதோப்பு அம்பாள் கோயில் கூட்டுப் பிரார்த்தனைச் சபைத் தொண்டர் சைவப்பிரசாரகர் திரு ந. சோமசுந்தரம் அவர்கள் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்கள்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

உடம்பெனு மனையகத்து
வுள்ளமே தகளிபாக
மடம்படு முணர்நெய் யட்டி
யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படுஞானத்தீயாலெரிகொள
விருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாளை
கழலடி காணலாமே
திருச்சிற்றம்பலம்
—திருநாவுக்கரசுசுவாமிகள்.

சிவபுராணம்.

எதிர் வரும் சிவராத்திரியை முன்னிட்டு மில்க்வைற் ஸ்தாபனத்தார் உரையுடன் கூடிய சிவபுராணத்தை வழங்கவிருக்கிறார்கள். வாங்கிப்படித்து பயனடையுங்கள்.

ஈழத்துச் சிதம்பர புராண அரங்கேற்றம்

புலவர்மணி சோ இளமுருகனார் அவர்களால் இயற்றப்பெற்ற ஈழத்துச் சிதம்பர புராணம் எதிர்வரும் மகாசிவராத்திரி நாளில் நடராஜர் சந்நிதியில் அரங்கேற்றப்படும். குறித்த விழாவில் பாராட்டு விழா மலர் ஒன்று வெளியிடப்பட்டு நூலாசிரியருக்கு, உரையாசிரியரும் பாராட்டப் பெறுவர்.

அரசியலமைப்பில்

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுதல் வேண்டும்

திரு. இராஜராஜேஸ்வரன் தங்காசா அவர்கள்
(நியாயவாதி, தலைவர் - திறன் ஆயுவுக கழகம் யாழ்ப்பாணம்)

அரசியல் சாசன அமைச்சருக்குத் தெரிவிக்கும் ஆலோசனைகள்

கனம் அரசியல் அமைப்பு அலுவல்கள் அமைச்சரவர்களே,

நீங்கள் ஆங்கில அரசிலிருந்தோ அல்லது தற்போதைய சட்டமுறையமைப்பிலிருந்தோ அதிகாரத்தைப் பெறாமல் அரசியலமைப்பை உருவாக்க முயலுவதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள் இது உண்மையானால் உங்களுக்குத் தற்போது பாராளுமன்றப் பிரதிநிதியென்றோ, அரசியல் அமைப்பு அலுவலகள் அமைச்சரென்றோ தங்களைக் கூறிக கொள்வதற்கு ஒரு தகுதியுமில்லை என்ற நிலை ஏற்பட்டுவிடும். ஆங்கில அரசிலிருந்து தரப்பட்ட தற்போதைய சட்டமுறையை நீங்கள் முற்றாக ஏற்று நடப்பதனாலேயே உங்களுக்குப் பாராளுமன்றப் பிரதிநிதி என்ற பதவியும், மற்றும் புதிய சட்ட அமைப்பை உருவாக்க முயலுவதற்கு கௌரவ அரசியல் அமைப்பு அமைச்சர் என்ற முறையில் நவலங்காவில் சகல பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கூட்டும் சந்தர்ப்பங்களும் எம்மைப் போன்ற பொது மக்களிடமிருந்து அறிவுரை கோருவதற்கு உத்தியோக பூர்வமான அத்தஸ்தும் ஏற்பட்டுள்ளது என்பதை மட்டும் மறந்துவிடாதீர்கள்.

நீங்கள் கூட (மறைமுகமாக) ஆங்கில அரசிலிருந்தே தரப்பட்ட அதிகாரத்தையே ஏற்பதை நோக்கமாகக் கொண்டு உங்கள் நகல் திட்டத்தின் 36, 37 ம் ஷரத்துக்களைத் தயாரித்துள்ளீர்கள். இந்நிலையில் தற்போதய அரசியல் திட்டம் உதாசீனப் பட்டுள்ளது என்றவார்த்தை உங்கள் வாயிலிருந்து வருவது மிக விசித்திரமாகவுள்ளது: முரண்பாடாகவும் இருக்கின்றது.

அடுத்த வரியில் நீங்கள் அமைக்கப்போகும் சட்ட அமைட்புக்கு அதிகாரமளிப்பது ஸ்ரீலங்கா மக்களே எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். இதுகூட உண்மைக்கு ஒவ்வாததாகும். ஏனெனில் நீங்கள் பொதுமக்களிடமிருந்து அபிப்பிராயங்களைக் கோரிய

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

ஞாபகார்த்தச் சொற்பொழிவுகள்

சிவபதமடைந்த சிவநெறிச் செல்வர் உயர்திரு. பொன். ஸ்ரீ சுகந்தராஜா அவர்களும், பரிபூர்ண மணி ஸ்கந்தராஜா அவர்களதும் ஞாபகார்த்தமாக திரு. சி. வா. ஜகந்நாதன் அவர்கள் சமயச் சொற்பொழிவாற்றுவார்கள்.

22-1-71 செல்வச்சந்நிதி- கந்தரனுபூதி
23-1-71 திருக்கேதீஸ்வரம் — சிவராத்திரி
25-1-71 குருமனிதநேயம், சைவ முன்னேற்றச் சங்கம் - சமய வாழ்வு
26-1-71 கொழும்பு செட்டியார் தெரு, முத்துவிநாயகர்ஆலயம் சிவதொண்டு
27-1-71 நல்லூர்ப்பிட்டி சரஸ்வதி மண்டபம் — சைவத்தின் சிறப்பு — —

பண்டிதர் வ. மு. இரத்தினேசுவரஐயா அவர்களுக்கு உதவுங்கள

பண்டிதர் பிரம்மஸ்ரீ வ. மு. இரத்தினேசுவர ஐயரவர்களுக்கு பின் வரும் அன்பர்கள் பணமுதவியுள்ளனரென்பதைப் பண்டித மணியவர்கள் எமக்குத் தெரிவிக்கின்றனர்.

		ரூபா சதம்.
5-2-71 வரை சேர்ந்தது		135-00
திரு. சு. சிவசுப்பிரமணியம்	கொழும்பு	11-00
	மொத்தம்,	146-00

11-2-71 —பத்திராதிபர்,

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

சிதம்பரதலத்திற்கு நிலங்களைத் தருமஞ்செய்த அம்மையார்

THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்கு
சூழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கமே.

திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

சாதாரண ஆ தை மீ ௩0-௨ வெள்ளிக்கிழமை [1971]

நம் முன்னோரும் பொதுவுடைமை வாழ்வும்

பணம் படைத்தவர்கள் தங்கள் செல்வத்தை மேலும் பெருக்க விரும்புவது இயல்பு. அங்ஙனம் பெருக்கப்படும் செல்வம் உடையவனிடத்தில் நிலைத்து நில்லாது; அதனைக் கள்வர்கள் கொண்டு செல்வார்கள்; அச் செல்வம் தீயினாலழியும்; நீரினாலழியும்; ஆனால் அச் செல்வத்தை அச் செல்வமுடையவன் தனக்குதவும் வண்ணம் வைக்க வேண்டிய இடம் ஒன்றுண்டு. அது வறியாரது பசியை அகற்றுவோக்கித் தீர்த்தலாகும்.

**"அற்றார் அழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள் வைப்புழி"**
— திருவள்ளுவர்.

மக்கள் இக் காலம் தங்கள் செல்வத்தை வங்கியில் சேமித்து வைக்கும்படி அரசாங்கத்தாரால் கேட்கப்படுகின்றனர். திருவள்ளுவர் கூறும் வங்கி வேறு விதமானது—மற்றைய வங்கியிலும் சிறந்தது மேலும் திருவள்ளுவ நாயனார் ஒருவனுக்குப் பசியென்னுமநோய் தீண்டாமலிருப்பதற்கு ஒரு உபாயம் கூறுகின்றனர் ஒருவன் தான் உணவருந்தும்பொழுது அதனைப் பகுத்துண்ணப் பழகுவானாயின் அவனைப் பசியென்று சொல்லப்படும் தீய நோய் தீண்டுதலில்லை

**"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது"** —திருவள்ளுவர்

பட்டினத்தடிகளும் ஒருவன் தனது செல்வத்தை எவ்வாறு செலவு செய்தல் வேண்டும் என்ற வகையில் உலக மக்களுக்கொரு உபதேசஞ் செய்கின்றனர்.

பிறக்கும் பொழுது கொண்டு வந்ததில்லைப் பிறந்து மண்மே
லிறக்கும் பொழுது கொண்டுபோவ தில்லை யிடை நடுவிற்
குறிக்குமிச் செல்வஞ் சிவன்றந்த தென்று கொடுக்கறியா
திறக்கும் குலாமருக் கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே.

காஞ்சிபுரத்தி லெழுந்தருளியிருக்கும் பெருமானே! ஏகாம்பரநாதனே! ஒருவன் உலகத்தில் பிறக்கின்றகாலத்திலே யாதொன்றையுங் கொண்டு வந்ததில்லை. பிறந்து வாழ்ந்து இறக்கின்ற காலத்து அச் செல்வத்தை அவன் கொண்டு போவதில்லை. பிறப்பதற்கும் இறப்பதற்கும் இடையில் வந்த இச் செல்வமானது பிறப்பதற்கும் இறப்பதற்கும் இடையிலுள்ள மத்திய காலத்தில் சிவபெருமானால் கொடுக்கப்பட்டதென்றெண்ணி அவனதை இப்பவர்க்கு வழங்குதல் வேண்டும். அங்ஙனம் தங்கள் பொருளை கொடுக்காமல் இறந்துபோகும் பிரபஞ்ச அடிமைக்கு நானெதை எடுத்துக் கூறுவேன்? என்ற திருப்பாடலைப் பாடினர்.

இவ்விதமாகச் செல்வம் படைத்தவர்கள் பின்பற்றி வாழவேண்டிய விதிகளை மெய்ஞ்ஞானிகள் உபதேசித்து மறைந்துவிட்டார்கள். அவர்கள் பொன்மொழிகள் செல்வர்கள் தங்கள் செல்வத்தாலடையும் பயனைக் கூறியுள்ளார்கள். பொதுவுடைமை நாட்டில் பரவ நமது மெய்ஞ்ஞானிகள் காட்டிய வழியே சிறந்தது. பொதுவுடைமையைச் சட்ட மூலமாகப் பரப்புவதிலும் பார்க்க நம் முன்னோர்கள் கூறிய வழியே சிறந்ததாகும்.

திருக்கேதீச்சரத்தில் மகாசிவராத்திரி

மாசித்திங்கள் 11ம் நாள் (23-2-71) செவ்வாய்க்கிழமை திருக்கேதீச்சரத்தில் மகா சிவராத்திரி தினம் வழமைபோல் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

கௌரியம்பாள் சமேத திருக்கேதீச்சர நாதருக்கு விசேட அபிஷேகாராதனைகள், நான்கு யாமப் பூசைகளுடன் திருமுறையோதல், புராண படனம், சமயச் சொற்பொழிவுகள், கதாப்பிரசங்கம் முதலிய சற்கருமங்களும் இடம்பெறும். இவற்றில் சைவப்புலவர் மணி த. குமாரசுவாமிப்பிள்ளை, ஸ்ரீ கி. வா ஜகன்நாதன், தேவார இன்னிசைச் செல்வர் P. A S. ராஜசேகரன் முதலியவர்கள் பங்குபற்றுவார்கள்.

வானொலி அஞ்சல்

23-2-71 செவ்வாய்க்கிழமை இரவு 9-30 மணிதொடக்கம் மறுநாட்காலை 6-25 மணி வரையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் வழமைபோல் கேதீச்சரம் சிவராத்திரி நிகழ்ச்சிகளை அஞ்சல் செய்யும் இ. போ. சபையினர் விசேட பஸ் போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்துள்ளனர்.

ஸ்ரீமதி புண்ணியநாச்சி அம்மையார் தினம்

சைவ பரிபாலன சபையின் கண்ணியமான முயற்சி

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே,

கோவில் என்பது சிதம்பரமே. தரிசிக்க முத்தி தரும் திவ்விய தலம், ஈழநாட்டு மக்கள் சிதம்பர நடராசப்பெருமானை ஆதியிலிருந்து வழிபட்டுவருகின்றவர்கள். யாத்திரீகர்கள் தங்குவதற்கு பல மடங்களையும் அமைத்து நடராசப் பெருமானுக்குக் கட்டளைப்பூசை அபிடேகஞ் செய்ய ஒழுங்குசெய்தார்கள். அவ்வித சிவப்பணிகளைத் தடைபடாது நடாத்துவதற்குப் பொருளுதவி பெற ஈழநாட்டில் பெருந்தொகையான நிலங்களையும் தருமசாதனஞ் செய்துள்ளனர், சிதம்பரத்தில் ஒரு மடத்தினை அமைத்து ஈழநாட்டில் நிலங்களையும் தருமசாதனஞ் செய்து வைத்தவர்களுள் ஸ்ரீமதி புண்ணியநாச்சியம்மையார் ஒருவராவர், அம்மையாருடைய ஞாபகத்தை ஈழநாட்டுமக்கள் நினைவுகூருதற்காக அவருடைய தினத்தை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையார் மாசி 5-ஆம் திகதி (17-2-71) புதன்கிழமையன்று திருவருளை முன்னிட்டு சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கொண்டாடுகின்றார்கள்.

சைவசமயிகள் யாவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

நிகழ்ச்சிகள்:

மு. ப. 10 மணி அம்மையார்பேரில் வண்ணை வைத்தீஸ்வரன் கோயிலில் அபிஷேகாராதனை.

மு. ப. 10 மணி தொடக்கம் பி. ப. 1 மணிவரை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சிவபூசை மாகேசுரபூசை;

ஞாபகார்த்தக் கூட்டம் ஆரம்பம் மாலை 6 மணி

தலைவர்; சித்தாந்த வித்தகர்

திரு. வே. நாகலிங்கம் J. P., U. M. அவர்கள்
சைவபரிபாலன சபைத் தலைவர்.

1 தமிழ்மறையோதல்
ஸ்ரீமத் தி. கலியாணசுந்தரக் குருக்கள்
2 தலைவர் முன்னுரை
3 சிதம்பரம் புண்ணியநாச்சி மட தரும வரலாற்றறிக்கை
4 "சிதம்பரதலமும் நாவலரும்"
சைவப்புலவர் மணி திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை
5 புண்ணியநாச்சி யம்மையாரும் ஈழநாடும்
'சிவநெறிக் காவலர்' முதலியார் செ. முத்துத்தம்பி
6 கோயிற் புராணம்
திரு. மு. சதாசிவம்

ஆ. தனபாலசிங்கம் — காரியதரிசி.
மு. மயில்வாகனம் — சமயப்பிரசார அமைச்சர்,
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 11—2—71.

சோதீஸ்வ ரூப சுந்தர வதனு!

இராகம்: அம்ஸத்தொனி :: தாளம்: ஆதி

பல்லவி

ஆதிவிநா யகனே — பிரணவ
அற்புதனே தில்லைக் கற்பகனே..... (ஆ)

அநுபல்லவி

சோதீஸ்வ ரூப சுந்தர வதனு
வேத விநாயக விக்கின ராசா (ஆ)

சரணம்

பாலும் தேனும் பருப்பும் கரும்பும்
பழமும் பெருந்தேங் காயும் விரும்பும்
மூலாதார மூர்த்தியே — அருள்
மூஷிக வாகன ஞானப்ர காசா. (ஆ)

—அளவையூர். "அருட்கவி" சி. விநாசித்தம்பிப் புலவர்

மைசூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில் வெள்ளி விழா

ஷை விழாவில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் 26—1—71 செவ்வாய்க்கிழமை தொடக்கம் ஐந்து நாட்களுக்கு 'கந்தபுராணம்' என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்தினார்கள்.

இலவச சமயபாட வகுப்பு

—0—

சாந்தையர்மடம், ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக்கழகத்தினரால் வழமைபோல நடாத்தப்படும் சமய பாடவகுப்பு இம்மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. வகுப்பில் சேர விரும்புவோர் செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

X X X

16-ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

சாந்தையாமடம், ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் 16வது வருடாந்தக் பொதுக் கூட்டம் 2—2—71 செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் சைவப்புலவர் வ கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. புது வருட உத்தியோகத்தர் தெரிவு செய்யப்பெற்றனர். [ந. தி.]

வள்ளுவர் கலைமன்றம்

ஷை மன்றத்தின் ஈராண்டு நிறைவு விழா 14-1-71ல் நடைபெற்ற பொழுது அடுத்த ஆண்டுக்குரிய உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பெற்றனர்

—:—

புதிய அரசியல் அமைப்பு

புதிய அரசியலமைப்பு அமைச்சருக்குத் தனிப்பட்டவர்களாலும் சங்கங்களாலும் அனுப்பப்பட்ட அறிக்கைகள் பிரேரணைகள் ஆகியவற்றை ஆராய்ந்து அரசியலமைப்பு வழிகாட்டுக் குழுவுக்கு ஆலோசனை கூற திருவாளர்கள் ஜே. ஆர். ஜெயவர்த்தனா, டட்லி சேனநாயகா, எஸ். ஜே. வி. செல்வநாயகம், சி எக்ஸ், மார்ட்டின், கொல்வின் ஆர். டி. சில்வா ஆகியவர்களை உறுப்பினராகக் கொண்ட ஒரு உபகுழு நியமிக்கப்பட்டது. இக்குழுவின் முதலாவது கூட்டம் இம் மாதம் 15ம் திகதி கூடுகிறது.

—:—

பா. உ. ஆட்சேபம்

வருமான மதிப்பீடுகள் தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்படுவதை ஆட்சேபித்து இறைவரித் திணைக்கள ஆணையாளருடன் ஊர்காவற்றுறை பா. உறுப்பினர் திரு. கா பொ இரத்தினம் அவர்கள் தொடர்பு கொண்டுள்ளார்.

அஞ்சல் தொடர்புகள் கடிதவிதழ்களில் தமிழ் புறக்கணிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சருக்கும் தெரிவித்திருக்கின்றனர்.

பிழை திருத்தம்

சென்ற 29-1-71 இல் வெளிவந்த இந்துசாதனத்தில் கொமிசனர் திரு சி செ. பாலசிங்கம் அவர்கள் வெளிப்படுத்திய M. B. 8645 ஆம் இலக்க விளம்பரத்தில் வழக்காளிகள் எனும் பகுதியில் (1) முருகேசு வேலுப்பிள்ளை என்றிருப்பதை (1) முருகேசு வேலாயுதபிள்ளை என்று திருத்தி வாசிக்கவும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M. B 11010

மல்லாகத்தைச் சேர்ந்த மாதர் நாகலிங்கம்

எதிராக —வழக்காளி

மல்லாகத்தைச் சேர்ந்த இருவர்

1 கந்தன் சுப்புக்குட்டியும் 2 மனைவி இராசம்மாவும்

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 11010ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1971ம் ஆம் பங்குனி மாதம் 24ம் திகதி (24-3-71) புதன்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1695/-ம் 2-8-69 தொடக்கம் 3-4-70 வரைக்கும் ரூபாய் 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 391 சதம் 65 அதாவது, எற்பட்ட செலவு ரூபாய் 232 சதம் 95 வெளியாத்துச் செலவு ரூபாய் 79 சதம் 70 இனிமேல் ஏற்படுஞ் செலவு ரூபாய் 79/-

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் வடக்கு டிவிசன் தெல்லிப்பளை கோவிற்பற்று தெல்லிப்பளை கிழக்கு இறை "சாயுடை வடக்கு" பர. நில. இலா. 15½ இதில் வடபக்கமாக பங்கிடப்பட்ட பர. நி. இலா. 13 அதைச் சேர்ந்த மனைகளும் பின் சொல்லப்பட்ட பர. நி இலா. 13க்கும் எல்லைகள் கிழக்கு: ஐயாக்குட்டி மனைவி சிவக்கொழுந்துவினுடைய ஆதனமும், மல்லாகக் கிராமத்தின் எல்லையும். வடக்கு: அம்பலம் தம்பிப்பிள்ளையினுடைய ஆதனம், மேற்கு: ஒழுங்கை, தெற்கு: ஐயாக்குட்டி மனைவி சிவக்கொழுந்துவினுடைய ஆதனம், இதடங்கலும் உளதும் உடையது. பதிவு இலக்கம்: H 325/141

எ. பி. பி எதிர்மன்னசிங்க

107, பெரியதெரு. வெந்தீஸ் கொமிஷனரும்,

யாழ்ப்பாணம். விலைமதிப்பாளரும்.

5-2-71 எம். 493 12-2-71

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M, B. 9504

சண்முகம்பிள்ளை கைம்பெண் பாக்கியப்பிள்ளை கோப்பாய் வடக்கு

எதிராக — வழக்காளி

(1) சிவகுரு நடராசா (2) சிவகுரு செல்லத்துரையும் பெண்

(3) இரத்தினேஸ்வரி எல்லோரும் நீர்வேலி —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B. 9504ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஆம் மாசி மாதம் 27-ந் திகதி (27-2-71) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை :— முதல் வட்டி ரூபாய் 7075/—ம் 19-10-67 தொடக்கம் 11-6-68 வரைக்கும் ரூபாய் 5000 க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 452 — 20 இதில் ரூபா 2000/- 3-9-70ல் இவ்வழக்கின் பெயரால் கட்டப்பட்டது.

ஆதன விபரம

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப் பகுதி கோப்பாய் கோவிற்பற்று நீர்வேலியிறை சிவதாவுடை நிலப்பரப்பு 10, 5/8 பத்தையேயரைக்காலும் மனைகளும் கிணறும் கிழக்கும், மேற்கும், தெற்கும் ஒழுங்கை வடக்கு இராசரெத்தினம் பெண் அன்னலட்சுமியின் ஆதனமும், ஒழுங்கையும் இதடங்கலும்.

"கமலபதி" மு. நவரத்தினராசா

ஆஸ்பத்திரி வீதி, கொமிசனர் & விலைமதிப்பாளர்

மல்லாகம். 25-10-70 எம். 336 30—10—70

கோட்டு விற்பனவு விளம்பரம்

வட்டுக்கோட்டை மேற்கு, இராமலிங்கம் குமாரசாமி

வழ. இல: M B 9148 எதிராக

சங்கானை 1. P. முத்தையாபிள்ளை அன்சன்ஸ் மட்டுப்படுத்தப்பட்டது தங்களது காரியதரிசி சங்கரப்பிள்ளை பூபாலசிங்கம் சார்பாக. —எதிராளி

2. 185 யூனியன் பிளேஸ், கொழும்பு ஸ்ரீ லங்கா விமான் கொம்பனி மட்டுப்படுத்தப்பட்டது. தெரிவிக்கப்பட்டபகுதி.

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M.B 9148 -ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுககட்டளைப்படி. பின்னால் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகளை 1971-ம் ஆம் பங்குனிமீ 6ம் திகதி (6-3-71) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும், 10-30 மணிக்கு இரண்டாம் காணியும் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 6233-33ம் 11-6-67 தொடக்கம் 25-2-70 வரைக்கும் ரூபாய் 5000/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 585-61

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சங்கானை இறை "ஈரவரவையும் திருவன் அடைப்பு" பர. நில. இலா. 3 குளி 4, 5/8 கொண்ட, கட்டடங்கள், யந்திரங்களும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும், இதற்கு எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பெண் திரவியத்திற்கும், தம்பையா பெண் செல்வரெத்தினத்துக்குமுரிய காணியும், ஆதனங்களும், வடக்கு வேலுப்பிள்ளை பெண் திரவியம், சங்கரப்பிள்ளை பெண் நாகரெத்தினத்திற்கும் நாகரெத்னம் கைம்பெண் சிவபாகியத்திற்குமுரிய ஆதனங்கள், மேற்கு அம்பலவாணசுவாமி கோவிலுக்கு சேர்மதியான ஆதனம், தெற்கு முதலி சின்னட்டிக்குமுரிய ஆதனம், இதடங்கலும்.

2. மேற்படி இறை 'தரவரவை' பர நில. இலா. 2 குளி 6, 7/8 கட்டடங்களும் வான்பயிர்களும் செய்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு சிதம்பரம் அம்பலவாண சுவாமி கோவிலுக்கு சேர்மதியான ஆதனமும். வடக்கு ரோட்டு மேற்கு வல்லிபுரத்துக்குரிய ஆதனமும், தெற்கு வேலுப்பிள்ளை கனகசபாபதிக்குரிய ஆதனம். இதடங்கலும்.

நா. ஸ்ரீ இரங்கநாதன்,

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

20 பெருமாள் கோவில்

வடக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம், 20-1-71. எம், 495 1-212-71

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல. M B 11249

சுருவில் V. மாணிக்கம் கைம்பெண் யோகம்மா

—வழக்காளி

எதிராக

சுருவில் 1. முருகேசு நல்லதம்பியும் பெண் 2. யோகம்மாவும்

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 11249 - ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை 1971-ஆம் ஆண்டு மாசி மீ 20-ஆம் திகதி (20-2-71) சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 2000/—ம் 17-11-69 தொடக்கம் 9-3-70 வரைக்கும் ரூபா 1000/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 286-85 சதமும்.

ஆதன விபரம்

(1) வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திரிக் தீவுப் பகுதி ஊர்காவற்துறை கோவிற்பற்று சாவலை இறை 'வெள்ளேடை' பர. நில. இலா 6¾ எல்லை கிழக்கு ஐயம்பிள்ளை பெண் செல்லாச்சியின் ஆதனம். வடக்கு தெட்சணமூர்த்தி பெண் பாக்கிய லெட்சுமியின் ஆதனம். மேற்கு கீழே சொல்லப்படும் இரண்டாம் ஆதனம். தெற்கு விநாசித்தம்பி வேலாயுதபிள்ளைக்கும், குமாரத்தை வழிவேலு பெண் சரஸ்வதிக்கும், பொன்னம்பா சோமசுந்தரத்துக்கும் உரிய ஆதனம். இதடங்கலும்.

(2) மேற்படி இறை 'வெள்ளேடை வயல்' பர நெல் இலா 13½. இதில் மேற்குப் பக்கமாக பர நெல் இலா 6¾-ம் எல்லை கிழக்கு முதலாம் ஆதனம். வடக்கு தெட்சணமூர்த்தி பெண் பாக்கியத்துக்குரிய ஆதனம். மேற்கு குமாரு சுப்பிரமணியத்துக்குரிய ஆதனம். தெற்கு குமாரு சுப்பிரமணியம் பெண் வள்ளியம்மைக்கும், விநாசித்தம்பி வேலாயுதபிள்ளைக்கும் உரிய ஆதனம். இதடங்கலும்.

அ. ஜெகநாதன்

கொமிஷனர் & விலைமதிப்பாளர்

16, A அம்மன் ரோட்,

கந்தர்மடம்; யாழ்ப்பாணம்.

M. 494 12—2—71

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 10973

மரிமுத்து கந்தையாவும் பெண் சிவக்கொழுந்துவும் நவற்கிரி, புத்தூர் —வழக்காளிகள்.

எதிராக

கார்த்திகேசு இராசையா சிறுப்பிட்டி மேற்கு சிறுப்பிட்டி

— எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M. B. 10973-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1971-ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10-ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-00 மணி வளவில் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:— முதல் வட்டி ரூபா 1875-00ம் 23-7-69 தொடக்கம் 23-4-70 வரைக்கும் ரூபா 1000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 401/80. இதில் ரூபா 125/- கொடுபட்டுள்ளது.

(1) வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் கிழக்குப் பகுதி புத்தூர் கோயிற்பற்று சிறுப்பிட்டி இறை "சிவாணியன் தோட்டம்" நில பர 4. எல்லை கிழக்கு தம்பு சிங்கராசா பெண் இராசமணிக்குரிய ஆதனம். வடக்கு கனகசபை பெண் இளையபிள்ளைக்குரிய ஆதனம். மேற்கு முருகர் கைம்பெண் வள்ளிப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு குட்டியர் சின்னத்துரைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம் இதில் இருக்கும் கிணற்றில் பங்கும் வழிவாய்க்காலும்,

2 ஷை சிறுப்பிட்டி இறை "வெலிஆய்" நில பர 40. இதில் மேற்குப் பக்கமாக நில பர 20. எல்லை கிழக்கு சின்னத்தம்பி பெண் மாணிக்கத்துக்கும் மற்றோருக்குமுரிய ஆதனம். வடக்கு வேலுப்பிள்ளை கனகர் பெண் இளையபிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு கார்த்திகேசு பெண் சதாசிவியின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு கணபதிப்பிள்ளை சின்னத்தம்பி பெண் மாணிக்கத்துக்குரிய ஆதனம். இதில் சொரியளவு (½) அரைவாசிப்பங்கு.

நீ. அன்னரிப்பிள்ளை

கொமிஷனரும்விலைமதிப்பாளரும்

22 கோவில் வீதி,

யாழ்ப்பாணம்.

M 498 12—2—71

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டில்

சுழிபுரம் நாகலிங்கம் கந்தையா கைம்பெண் பத்மாவதி

இல: M B 11337 எதிராக —வழக்காளி.

1. சுழிபுரம் மேற்கு. சுழிபுரம். அம்பலம் நடனசண்முகம்

2. ஷை பூர் பெண் திருமங்களதேவி —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B ம்11337 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி 1971-ஆம் ஆம் பங்குனி மாதம் 12-ம் திகதி [12-3-71] வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 3173-75ம், 24-12-69 தொடக்கம் 17-6-70 வரைக்கும் ரூபா 2000/-க்கு 9 வீதமான வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 445-55

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுழிபுரம் இறை "முக்குளியன் தோட்டம் தச்சன் தோட்டம்" பர. நி. இலா. ஐந்து (பர. நில. இலா. 5) பனைகள் தென்னைகள் வடலிகள் கிழக்கெல்லைக்காணியிலிருக்கும் கிணற்றுப் பாகமும், வழிவாய்க்காலும் எல்லை கிழக்கு முருகன் கிருஷ்ணருக்குமுரியவாதனம். வடக்கு கப்பன் முருகனுக்குரியவாதனம் மேற்கு ஒழுங்கை. தெற்கு ரோட்டு, இதடங்கலும்.

வை. ஏரம்பமூர்த்தி

காரைநகர். 1970-ம்ஆம் மார்கழிமீ 29-ம்திகதி கொமிஷனரும்

எம்.496 12-2-71. விலைமதிப்பாளரும்.

கோட்டு விற்பனவு விளம்பரம்

1 சண்டிலிப்பாய், அளவெட்டி வடக்கு

சுப்பையா கைம்பெண் சிறீரான்மணி புவிசேகரமும்

2 புவிசேகரம் நடராசா —வழக்காளிகள்

வழ: இல. M B 6765 எதிராக

1 நாவலர் ரோட், யாழ்ப்பாணம்

முத்துக்குமாரு குளந்தைவேலு கதிரவேலு

2 சோமசுந்தரம் விநாசித்தம்பி புக்குடுதீவு மேற்கு.

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டின் M B 6765ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் முதலாம் துண்டுக்காணி 1971ம் ஆம் பங்குனிமீ 27-ம் திகதி (27-3-71) சனிக்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். 2ம், 3ம் துண்டுக்காணிகள் அதே தினம் (27-3-71) பிற்பகல் 2 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 12600 இதில் 12600 ரூ 10-6-64 தொடக்கம் 26-7-66 வரைக்கும் 100க்கு 12 வீத வட்டியும் பின் கூட்டுத்தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 751 சதம் 81 இதில் ரூபா 200 குறைவு 9-10-67 கோட்டுக் கட்டளைப்படி செலவு ரூபா 52—0 இதில் ரூபா 2000 ரூபா குறைக்கப்பட்டுள்ளது. 4-7-70 இல் ரூபா 3000 குறைக்கப்பட்டது.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை 'மாவடி இளக்கட்டியும் சம்பநாதன்தறையும் பர. நில. இலா. 4 குளி 13, 17/20 இதில் தெற்குப் பாகமாக பிரிக்கப்பட்ட பர. நில. லா. இரண்டு மேற்சொல்லப்பட்ட 2 பரப்பும் உத்தரவு பெற்ற உலாந்தா T. கந்தையாவால் 28—9—61ல் கட்டப்பட்ட பிளான் 1017ல் 2 என்னும் இலக்கத்தால் காட்டப்பட்டிருக்கும் மேற்கெல்லையிலிருக்கும் கிணற்றில் பங்கும் பயிர்வகைகளும் இந்த இந்த காணிகளு எல்லை கிழக்கு M. K. கதிரவேலுவினதனம். R. R. செல்லத்துரைக்கும் பெண் உருக்குமணிக்குமுரிய ஆதனம் மேற்கு T. நவரத்தினத்தினுடனம், O. தருமலிங்கத்துக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். மேற்சொல்லப்பட்ட படத்தில் 3 என்னும் இலக்கத்தால் கட்டப்பட்டதும் 3, 1/10 குளி விஸ்தாரங் கொண்டதும் வடகேயுள்ள ரோட்டிலிருந்து இக்காணியின் வடக்கு எல்லைக் காணியின் மேற்கெல்லை ஓரமாக இக் காணிக்கு வரும் மூன்றடி அகலமுள்ள தான வழிப் பாதையும்,

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் புங்குடுதீவு கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "கொண்டைத் தரைக்குக் கிழக்கு' பர. நில. இலா. ஆறு எல்லை கிழக்கு அம்பலவாணர் பெண் அன்னமுத்துவினுதனம். வடக்கு ரோட்டு, மேற்கு குழந்தை நாகமுத்துவினுதனம். தெற்கு வேலுப்பிள்ளை கந்தையாவினுதனம்,

மேற்படி இறை "தொண்டைத்தறைக்குக் கிழக்கு" பரப்பு நில இலா ஐந்து எல்லை கிழக்கு சோமசுந்தரம் விநாசித்தம்பியின் ஆதனம் வடக்கு, மேற்கு நாகமுத்து பெண் அன்னபூரணத்தினுதனம். தெற்கு வயிரமுத்து சின்னத்துரையின் ஆதனம்.

நம் 35/2, கோழும்புத்துறை வீதி, இ. கனகரத்தினம்

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

(எம், 497 12-2 71)

நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்டு.

சைவ சித்தாந்தப் புலமைப் பயிற்சி

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஒவ்வொரு போயா தினமும் பிற்பகல் 3 மணியிலிருந்து 5 மணி வரையும் சைவ சித்தாந்தப் புலமைப் பயிற்சி வகுப்பு இலவசமாக நடைபெறவிருக்கிறது.

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

அளவெட்டி தெற்கு கார்த்திகேசு பொன்னையா

இல: M B, 10681 எதிராக —வழக்காளி

யாழ்ப்பாணம். பெரியவிளான்,

1 அருளப்பு அமிர்தநாதரும் பெண்

2 ரூசம்மாவும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 10681ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971ம் வரு மங்குனிமீ 21-ம் திகதி (21-3-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 2461-66 இதில் ரூபா 1500/-க்கும் 15-3-69 தொடக்கம் 23-9-69 வரைக்கும் 100க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 338-40 (செலவழித்த செலவு ரூபா 203-20 வெளியாத்துச் செலவு ரூபா 68-20; எதிர் வரும் செலவு ரூபாய் 67/-)

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று பெரியவிழான் இறை 'மானுவலியா வளவு' (Manavaliya Valavu) பர நில (5) ஐந்தும் வீடும் செய்பயிர் வான்பயிர்களும் கிழக்கு சின்னப்பு பெண் பொன்னம்மாவினுதனமும். கையொழுங்கையும் வடக்கு கையொழுங்கை மேற்கு வடசேரிப்பிள்ளையார் கோயிலாதனம். தெற்கு வயிரமுத்து செல்லையாவினுதனம், இதடங்கலும் அதைச் சேர்ந்தவைகளுள் ஒழுங்கையருகாக வட கிழக்குப் பக்கத்தில் இருக்கும் கிணற்றில் பங்கும் இறைவாய்க்காலும் வழிப்பாவிப் புரித்தும்,

இல. 24, முதலாம் குறுக்குத்தெரு, க சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம், 30-10-70. கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்.

எம். 500 12-2-71

அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம். திருநெல்வேலி தெற்கு, 66/2 நாச்சிமார்கோவில் ரோட் தா. சி. குமாரசாமி அவர்களிடம் 1969ம் வரு செப்ரெம்பர் (புரட்டாதி) மாதம் 1-ஆம் திகதி (1—9—69) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 1971ம் வரு பெப்ரவரி (மாசி) மாதம் 28ம் திகதி (28—2—71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் ஒன்பது மணி தொடக்கம் மேற்படி அடைவு கடையில் வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை

ஏலவிற்பனவாளர்

"இராசகிரி" கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும்

643, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம். எம். 488 5, 12—2—71

கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழ: M B 11118

சங்கானை மேற்கு, பண்ணாகம் தெற்கு, பண்டாரப்பிள்ளை அம்பலவாணர் —வழக்காளி

களிபுரம். சின்னப்பு கைம்பெண் மிகுட்சிப்பிள்ளை —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 11118-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழ்க்காணும் ஒரு துண்டுக்காணி 1971-ம் வரு பெப்ரவரி மீ 28ந் திகதி (28-2-71, ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9-30 மணிதொடக்கம் அதுகாணிகுள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்வட்டி ரூபா 2312/- இன்னும் ரூபா 1500/-க்கு 21-9-69 தொடக்கம் 16-6-70 வரை 100க்கு வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபா 355/50 இதில் ரூபா 150 கொடுபட்டுவிட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோயிற்பற்று சுழிபுரம் இறை 'கைக்கினியவயல்'. பரப்பு நெ. இலா' (10) பத்து. எல்லை கிழக்கு நாராணர் கைம்பெண் சின்னத்தங்கத்துக்குரிய ஆதனம். வடக்கு பொன்னையா பெண் ஆச்சிப்பிள்ளைக்குரிய ஆதனம். மேற்கு நன்னித்தம்பி கைம்பெண் தங்கமுத்துவுக்குரிய ஆதனம். தெற்கு இராமனுதர் முருகேசுவின் உரிமைக்காரருக்குரிய ஆதனம். இதடங்கலும். முருகேசு இராமலிங்கத்தக்குரிய "சர்பிற்புலம்" என்னும் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காற் பாவிப்புரித்தும், பதிவு இல. E 335/121.

S. இரத்தினசபாபதி, J. P

ஸ்ரேசன் ரோட், கொமிசனரும், விலைமதிப்பாளரும்

கோண்டாவில், 22-1-71. எம். 504 12-2-71

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 12—2—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு, மு. மயில்வாகனம் அவர்கள்

பாடசாலைகளில் சைவமாணவர் நிலை?

பக்தர் "யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பிரதப்பாடசாலைகளில் கல்வி பயிலும் சைவ மாணவர்க்குப் பிறமதபோதனை நடைபெறுகிறதாம். அந்த மதத்தின் தலைமைப் பீடம் இவ்விடயத்தில் வழக்கப்போல மிகச் சாதுரியமான திட்டத்துடன் கடமையாற்றுகிறதாம்! இந்தச் சைவமாணவர்கள் தங்கள் சமய வழிபாட்டு நேரத்தில் பிறமத வழிபாட்டுக்கு வலிந் திழுக்கப்படுகிறார்களாம்! இதுபற்றி வினவியபோது அதற்கென்னங்கா! தலையா போயிடப்போகுது? ஒருபாடம் மட்டுந்தானே? என்று சமரசம் பேசுகின்றார்களாம்! சைவ மக்கள் பலர் இச் செயல்களைக் கண்டு மன வேதனை யடைந்துள்ளனர்.

சித்தர்: "சைவ மக்கள் சகிப்புத் தன்மையில் தலை சிறந்தவர்கள் பாருங்க; அதுதான் 'தலையா போயிடும்? என்று அந்த ஆசாமி கேட்டிருக்கிறார்? சைவ மாணவர்க்கு சைவசமயக் கல்வியைப் பயிற்றுவதற்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும். இதுபற்றிச் சைவப் பெற்றோர், சைவம் வளர்க்கும் சபைகள், சான்றோர்கள், ஆவன செய்ய முன் வருவார்களா? 'தட்டுங்கள் திறக்கப்படும் ... ...' என்பது பொய்க்குமா? நாவலர்பெருமான் இன்றிருந்தால் பார்த்துக்கொண்டிருப்பாரா? நம்முட் பலரைத் துயிலெழுப்ப வேண்டியுள்ளது!

"நாயன்மார் – நாதன்"

கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: M B 8099

வீமன்காமம், நாகலிங்கம் குகதாசன் —வழக்காளி

எதிராக

வீமன்காமம்,

1 அல்பிறட் மயில்வாகனம் மகேந்தும் பெண்

2 மேபல் தேவநேசமும்

3 பேரின்பநாயகம் தேவராசாவும் பெண்

4 கிறிஸ்தோபஸ் ஜெயதேவியும் —எதிராளிகள

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B -ம் 8099 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971 - ஆம் வரு மாசி மாதம் 19-ம் திகதி (19-2-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைதொகை: முதல் வட்டி ரூபாய் 5100ம், 6-4-6 தொடக்கம் 26-1-67 வரைக்கும் ரூபாய் 3000க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 339-60 சதமும் செலவு தொகையில் ரூபா 250 கொடுபட்டிருக்கிறது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பளை கோவிற்பற்று வீமன்காமம் இறை 'கல்நொங்கை' நிலப்பரப்பு 10 ஏளி 3 1/2 ஆட்சிப்படி நிலப்பரப்பு 11ம் வீடும் குசினியும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும், தெற்கெல்லையில் வேம்பு பங்கும். எல்லை கிழக்கு ரோட்டு. வடக்கு கிருஸ்ணபிள்ளை பெண் சீதேவிப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்கும் உரிய ஆதனமும், தூர்வை நிலமும் மேற்கு ஒழுங்கையும் முருகுப்பிள்ளை பெண் நாகமுத்துக்கும் சகோதரங்களுக்கும் உரிய ஆதனம். இதடங்கலிற் சொரியலாய் மூன்றில் இரண்டு பங்கும், இன்னும் குறித்த தூர்வையில் பங்கும் அதில் இருக்கும் கிணற்றில் பங்கும் தென்னைகளில் பங்கும்

அ. ஜெகநாதன்

கொமிஷனர், விலைமதிப்பாளர்

16 A. அம்மன்ரோட், கந்தர்மடம்

யாழ்ப்பாணம்.

எம். 492 12-2-71

அரசியலமைப்பில்

மனித உரிமைகள்

(1-ம் பக்கத்து வளர்ச்சி)

போதும். அவர்களுடைய மகஜர்களை முற்றாக ஏற்காமல் உங்களுடைய சொந்த இஷ்டப்படியே ஒரு நகல் அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்கி அரசியல் நிருபண சபையின் வழிகாட்டு விடயக் குழுவினர்க்குச் சமர்ப்பித்துள்ளீர்கள் எனத் தோன்றுகின்றது.

பொது மக்களின் அபிப்பிராயத்தின்படி ஒரு அரசியல் அமைப்பைத்தான் அரசியல் நிருபண சபை ஏற்பது சரியானால் ஏன் நீங்கள் உங்களுடைய சொந்த நகல் திட்டத்தை சமர்ப்பிக்க முயலுகின்றீர்கள் ?

இது ஒருபுறமிருக்க பொதுமக்கள் தான் முக்கியமானவர்கள் என்ற கூற்றை நீங்கள் ஏற்பீர்களானால் நீங்கள் எவ்வாறு பொது மக்களாலேயே புறக்கணிக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை உணர்ந்ததுண்டா ?

நம்முடைய நாட்டில் வாழும் 1.1 கோடி மக்களில் சுமார் 0 5 மக்களே வாக்காளராவர். அவர்களுள் சென்ற தேர்தலின் போது சுமார் 0.4 கோடி மக்களே வாக்களித்தார்கள். அங்ஙனம் வாக்களித்த 0.4 கோடி மக்களில் கூட்டணி அரசாங்கத்தைச் சார்ந்த கட்சிகளுக்குக் கொடுட்ட வாக்குகளிலும் பார்க்க, எதிர்க்கட்சியிலுள்ள கட்சிகளுக்குக்கிடைத்த வாக்குகள் கூடினதாகும் என்பதை ஒருவராலும் மறைக்க முடியாது.

நாட்டு மக்களின் ஒரு சிறுபான்மையருக்கே வாக்களிக்கும் உரிமை இருக்க அந்தச் சிறுபான்மையினரின் வாக்குகளில் கூடச் இன்னஞ் சிறுபான்மை பங்கான வாக்குகளையே தற்போதைய அரசாங்கம் பெற்றிருக்கும் நிலையிலிருக்க அதையும் பொருட்படுத்தாது மேற்கூடிய அரசாங்கத்திலேயே மிகச் சிறுபான்மையினராக அங்கத்துவம் வகிக்கும் கட்சிகளின் ஒன்றின் பிரதிநிதியாக இருக்கும் நீங்கள் எந்தக் காரணத்தைக் கொண்டும் பொது மக்களின் பிரதிநிதி என்ற ஸ்தானத்தைப் பெற முடியாது. அப்படிப்பட்ட நிலையிலுள்ள நீங்கள் எங்ஙனம் உங்களுக்குப் பதவியைத் தந்த சட்டமுறையைப் புறக்கணித்துப்பொது மக்களின் அதிகாரத்தினூலம் புதிய அரசியல் திட்டத்தை உருவாக்க முடியும்? இதைவிட, தற்போதைய சட்ட முறையைப் புறக்கணிக்கின் இலங்கை வாழ் 1.1 கோடி மக்களின் ஒவ்வொருவருடைய சம்மதத்தையும் பெறுமல் அரசாங்கம் அமைக்கத் எந்த நபருக்கும் தத்துவமிருக்க முடியாது என்பதை சட்ட மேதையாகிய நீங்கள் அறிந்திருக்காமல் இருக்க முடியாது.

நீங்கள் தற்போதையசட்ட முறையைப் புறக்கணிக்க முயலுவது ஒருபுறமிருக்க, புதிதாக நீங்கள் சமர்ப்பித்த சட்ட திட்டங்களிலே பொது நீதிமன்றத்திற்கு முக்கியமாக அரசியல் சட்டப் பராமரிப்பு உரிமை இருக்காது எனக் குறிப்பிட்டுள்ளீர்கள். இது மிகவும் கேலிக்குரிய விடயமென்றே யான் கூறுவேன். ஏனெனில் நீங்கள் விரும்பியதுபோல் தற்செயலாக உங்கள் அரசியல் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துஇயக்கிவிட்டீர்கள் என வைத்துக்கொள்வோம். அத்தருணம் யாரோ உங்கள் எதிரிகள் வலோற்காரமாக அல்லது சட்டவிரோதமாக அரசியல்பதவியை உங்களிடமிருந்து அல்லது நீங்கள் அங்கத்துவம் வகிக்கும் அரசாங்கத்திலிருந்து கைப்பற்றினால் அல்லது கைப்பற்ற எத்தனித்தால் உங்களுக்குக்கூடப் பாதுகாப்பு அளித்து உங்கள் பதவியையே காப்பாற்றுவதற்குக்கூடச் சட்ட மன்றங்களுக்கு வலியில்லாமல்போய், எதேச்சாதிகாரமாக அரசியல் ஆதிக்கம் பெற்றுள்ளவர்களைக் கூடக் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படலாம். இதனுற்றான் நீதி மன்றங்களின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தினால் நாட்டில் தர்மங்குன்றி, இறுதியில் ஆளப்படுபவர்களுக்கு மட்டுமல்லாமல், ஆளுபவர்களுடைய நிலையும் விபரீதமாகமுடியக்கூடுமென எமது பண்டை நூல்களே கூறியுள்ளன.

ஆகவே, நான் தற்போது மிகுந்த நல்லெண்ணத்துடன் கூறமுன்வரும் அதிமுக்கிய ஆலோசனை என்னவென்றால்,

1 தற்போது இயங்கிவரும் அரசியல் திட்டத்தை உதாசீனஞ் செய்ய வேண்டாம்.

2. "உங்கள் அதிகாரம் தான் மக்கள் அதிகாரம்" என்ற கற்பனை வழியில் இறங்க வேண்டாம்.

3. நீதிமன்றங்களின் அதிகாரங்களைக் குலைக்க முயல வேண்டாம் என்பதேயாகும்.

ஆகவே, நீங்கள் மாற்ற முயலும் அரசியல் திட்டத்தின் வழியே ஒழுகி தற்போதைய ஜனப்பிரதிநிதி சபையின் மூன்றில் இரண்டு பகுதியினரால் ஏற்கப்பட்டுப் பின்னர் செனற் சபையினரின் பெரும்பான்மையினரால் ஏற்கப்பட்டு மகா தேசாதிபதியவர்களால் கைச்சாத்திட்ட பின்பே, புதிய அரசியல் திட்டத்தை ஏற்று நடப்பதற்கு ஒழுங்குகள் செய்யுங்கள். இதுவே முறைபானதாகும். உங்களுக்கும் நாட்டு மக்களுக்கும் சுபீட்சத்தையும் பாதுகாப்பையும் பிற்காலத்தில் அளிக்கும்.

அடுத்து உங்கள் நகல் திட்டத்தின் முக்கிய ஷரத்துக்களை அம்சம அம்சமாக ஆராய்வோம். (வளரும்)

நாவலர் நல்வாக்கு

உள்ளது போதும் என்று
அமைந்த மனமே குறைவு
அற்ற களஞ்சியம்.